Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 110 | உள்ளூர் - 20.04.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 110 | வெளியூர் - 21.04.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**எல்ஜசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட் - வேலைவாய்ப்புகள்!**

**விஜய் – சங்கீதா விவாகரத்து வழக்கு ஒத்திவைப்பு!**

**ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பல மடங்கு உயர்வு!**

**அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**

## விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து - ஜனாதிபதி திரவுபதி முர்மு இரங்கல்!

புதுடெல்லி, ஏப். 20–

பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், “தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் நிகழ்ந்த ஒரு கோரமான விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மிகுந்த வேதனையை அளிக்கின்றன.



உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டிக் கொள்கிறேன்” என்று பதிவிட்டுள்ளார்.

## மேற்கு வங்கத்தில் பிரசாரத்திற்கு நடுவே சாலையோர கடையில் சாப்பிட்ட பிரதமர் மோடி!

கொல்கத்தா, ஏப். 20–

மேற்கு வங்க மாநிலத்தில் இன்று 4 இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டங்களில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இதில் பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கும் ஜர்கம் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பிரசாரம் செய்தார்.



பிரசாரம் நடைபெறும் இடத்திற்கு சென்று கொண்டிருந்த பிரதமர் மோடி, திடீரென தனது வாகனத்தை நிறுத்துமாறு கூறினார். பின்னர் காரில் இருந்து இறங்கிய அவர், அங்கு சாலையோரம் இருந்த உணவு பண்டங்கள் விற்பனை செய்யும் கடைக்கு சென்றார். பிரதமரைக் கண்டதும் அங்கிருந்த மக்களும், வியாபாரிகளும் உற்சாகமடைந்தனர்.

தொடர்ந்து, அங்கிருந்த வியாபாரியிடம் நலம் விசாரித்த பிரதமர், அவரிடம் தனக்கு ‘ஜல்முரி’ என்ற உணவு பதார்த்தம் வேண்டும் என்று கேட்டார். ‘ஜல்முரி’ என்பது பொரி அரிசி, பச்சை மிளகாய் மற்றும் பிற மசாலா பொருட்கள் கலந்து செய்யப்படும் உணவு பதார்த்தம் ஆகும். இது மேற்கு வங்கத்தில் பிரபலமான சாலையோர உணவாக திகழ்கிறது.

இதனை வாங்கி சாப்பிட்டு மகிழ்ந்த பிரதமர் மோடி, அதற்கான பணத்தை வியாபாரியிடம் கொடுத்தார். கடைக்காரர் அந்த பணத்தை வாங்க மறுத்தபோது, பிரதமர் மோடி, ‘பணத்தை வாங்கி கொள்ளுங்கள்’ என்று வற்புறுத்தி பணத்தை கொடுத்தார். இதையடுத்து கடைக்காரர் பணத்தை வாங்கிக் கொண்டார்.

இது தொடர்பான வீடியோவை தனது ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்ட பிரதமர் மோடி, ‘பரபரப்பான ஞாயிற்றுக்கிழமையில், பிரசாரத்திற்கு நடுவே சுவையான, காரசாரமான ஜல்முரியை சாப்பிட்டு மகிழ்தேன்’ என்று பதிவிட்டுள்ளார்.

## கருத்துக்கணிப்புகள் மக்கள் கணிப்புகள் என எதிலும் நாம்தான்: மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஏப். 20–

தமிழக சட்டசபை தேர்தல் 23–ந் தேதி நடக்கிறது. 234 தொகுதிகளில் மொத்தம் 4,023 வேட்பா ளர்கள் களத்தில் நிற்கின்றனர். தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவி வருகிறது. தேர்தல் நெருங்கி வருவதால், அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். தமிழகம் முழுவதும் வீதி, வீதியாக பிரசாரம் நடந்து வருகிறது.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், த.வெ.க. தலைவர் விஜய் ஆகியோர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



அரசியல் கட்சிகளின் அனல் பறக்கும் தேர்தல் பிரசாரம் நாளை மாலை 5 மணியுடன் ஓய்கிறது.

இந்த நிலையில், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:–

நேற்று பிற்பகல் 2 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் பரப்புரை தொடங்க ஆயத்தமானேன்... ஒசூரில் தொடங்கி, சென்னை எண்ணூரில் இரவு 10 மணிக்கு பிரச்சாரத்தை நேற்று முடித்தேன்.

ஒசூர் முடித்து மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, தி.நகர் ஆகிய தொகுதிகளில் சாலைகளில் மக்கள் வரவேற்பளிக்க சுமார் 5 கி.மீ. தூரத்துக்கு வீதி வீதியாக வாக்கு கேட்டுவிட்டு, இரவு திருவொற்றியூர் நெட்டுக்குப்பத்தில் வாக்குச் சேகரித்து மீனவச் சொந்தம் ஒருவரது வீட்டில் மீன் சாப்பிட்டதும்தான், நேற்றைய நாள் நிறைவுற்றது.

இப்போது, சூரியன் உதித்ததும் அண்ணா நகருக்குப் புறப்பட்டுவிட்டேன். கருத்துக்கணிப்புகள் மக்கள்கணிப்புகள் என எதிலும் நாம்தான்! வெல்வோம் 200; படைப்போம் வரலாறு. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஐ.டி. ரைடு - ஆமாவா? இல்லையா? செல்வப்பெருந்தகை!

சென்னை, ஏப். 20–

சோதனை என்ற பெயரில் வருமான வரித்துறையினர், வீட்டில் தன்னை சிறைப்பிடித்து வைத்திருப்பதாக செல்வப்பெருந்தகை புகார் கூறிய நிலையில், சோதனையே நடத்தவில்லை என்று வருமான வரித்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.




தமிழக காங்கிரஸ் தலைவராக செல்வப்பெருந்தகை பதவி வகித்து வருகிறார். இவர் வாக்காளர்களுக்கு விநியோகிக்க பணத்தை பதுக்கி வைத்து இருப்பதாக புகார்கள் எழுந்துள்ளது. அதன்படி கீழ்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் இன்று (ஏப்ரல் 20) காலை முதல் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். இது குறித்து, “வீட்டில் சோதனை என்ற பெயரில் என்னை வருமான வரித்துறையினர் சிறைப்பிடித்துள்ளனர்” என செல்வப்பெருந்தகை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் காங்கிரஸ் எம்பி ராகுல் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வந்துள்ள நிலையில், வருமான வரித்துறையினர் ஹிந்தி பேசும் அதிகாரிகளைக் கொண்டு ‘சோதனை’ என்ற பெயரில், ஸ்ரீபெரும்புதூர் சட்டசபைத் தொகுதிக்குள் என்னை சட்டவிரோதமாக முடக்கினர். பிரசாரத்திற்கு செல்ல விடாமலும், எனது அரசியல் கடமைகளை செய்ய விடாமலும் சோதனை என்ற பெயரில் என்னை சிறைபிடித்து வைத்துள்ளனர். மத்திய விசாரணை அமைப்புகளை அரசியல் அழுத்தத்தின் கருவிகளாகப் பயன்படுத்துவது கவலை அளிக்கிறது, அரசியல் உள்நோக்கம் கொண்ட இந்தச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இவ்வாறு செல்வ பெருந்தகை கூறியுள்ளார்.

**முதல்வர் கண்டனம்**

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், “தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகையின் பிரசாரத்தை முடக்க நினைக்கும் சதிக்குக் கடும் கண்டனம்; இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதை மறந்து, தேர்தல் பிரசாரம் முடிவடைய இன்னும் 48 மணிநேரம் கூட இல்லாத நிலையில், எதிர்க்கட்சியினரை முடக்க, தோல்வி பயத்தில் மத்திய பாஜ அரசு செய்துகொண்டிருக்கும் அட்டூழியத்திற்குத் தமிழக மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

**மறுப்பு**

இது குறித்து வருமான வரித்துறை கூறியதாவது: செல்வ பெருந்தகை வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தவில்லை. ராகுலின் பிரசாரத்திற்கு செல்ல விடாமல் தடுத்ததாக, செல்வபெருந்தகை கூறுவது உண்மையில்லை. அவரது வீடு உள்ளிட்ட எங்கும் சோதனை நடத்தவில்லை. இவ்வாறு வருமான வரித்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

## விரைவில்

# பிரதமர் மோடி, முதல்வர் சந்திரபாபு நாயுடு அர்ப்பணிக்கும் ஆந்திராவில் ஒரு KGF!!

## தங்கம் விலை குறையுமா?




புதுடெல்லி, ஏப். 20–

இந்தியா தனக்கு தேவையான தங்கத்தின் பெரும்பகுதியை வெளிநாடுகளில் இருந்து தான் வாங்குகிறது. இதனால் தான் சர்வதேச காரணிகள் இந்தியாவில் தங்கம் விலையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

உலக அளவில் ஏற்படும் வர்த்தக மோதல், வட்டி விகித மாற்றங்கள் அனைத்துமே உலக தங்க சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்து கின்றன, அது இந்திய சந்தையிலும் நாம் விலை கொடுத்து வாங்கும் தங்க நகைகளில் விலையும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்தியாவே ஒரு காலத்தில் தங்கத்தை உற்பத்தி செய்த நாடு தான். கர்நாடகா மாநிலம் கேஜிஎஃப் கோலார் தங்க சுரங்கம் மூலம் நாம் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இணையாக தங்கம், உற்பத்தி செய்தோம். ஆனால் 1990களுக்கு பின் அரசு இரும்பு, காப்பர் போன்ற பிற பொருட்களை தோண்டி எடுப்பதில் அதிக கவனம் செலுத்தியது. இதனால் தங்க சுரங்கங்கள் கண்டறியும் பணியும் நிறுத்தப்பட்டது. கோலார் தங்க சுரங்கமும் மூடப்பட்டுவிட்டது. இதனால் நாம் பெருமளவில் தங்கத்திற்கு இறக்குமதியை சார்ந்த நாடாக மாறிவிட்டோம். தற்போது மத்திய, மாநில அரசுகள் நாட்டின் எந்தெந்த பகுதிகளில் பூமிக்கு அடியில் தங்கம் இருக்கிறது, அவற்றை தோண்டி எடுக்க முடியுமா என்பது குறித்து ஆய்வு நடத்தபலநிறுவனங்களுக்கும் ஒப்பந்தம் தந்த வண்ணம் இருக்கின்றன.

குறிப்பாக தங்கம் தோண்டி எடுக்கும் உரிமையை தனியார் துறைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஆந்திர மாநிலத்தில் மிகப்பெரிய தங்க சுரங்கம் அமைக்கப்பட உள்ளது.

ஆந்திர மாநிலத்தின் ஜொன்னகிரி பகுதியில் பூமிக்கு அடியில் பெரிய அளவில் தங்கம் புதைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இங்கே தங்கத்தை பிரித்து எடுப்பதற்கான பணிகள் தனியார் நிறுவனத்திடம் குத்தகை முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கமாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் தான் இவ்வாறு தங்கத்தை தோண்டி எடுத்து உலோகமாக மாற்றி வழங்கும், ஆனால் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு தனியார் நிறுவனத்திற்கு இது வழங்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் Geomy–sore Services என்ற தனியார் நிறுவனம் ஜொன்னகிரியில் தங்கத்தை எடுத்து தங்கள் பிராண்ட் பெயரிலேயே விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. அந்த வகையில் ஹட்டி கோல்டு மைன்ஸ் நிறுவனத்திற்கு அடுத்து இந்தியாவில் செயல்பாட்டுக்கு வரும் இரண்டாவது தங்க சுரங்கம் இது.

இந்த சுரங்கம் பெரிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. Geomysore Services நிறுவனம் இந்த பகுதியில் தங்கத்தை பூமிக்கு அடியில் இருந்து பிரித்து எடுத்து உலோகமாக மாற்றி நேரடியாக தங்களுடைய பெயரிலேயே உள்நாட்டு நகை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்ய திட்டமிட்டு இருக்கிறது. எனவே உள்நாட்டிலேயே தங்கம் எடுக்கப்பட்டு நகை தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட உள்ளது. இதனால் இறக்குமதி செய்வதை விட குறைந்த விலையில் நிறுவனங்களுக்கு தங்கம் கிடைக்கும். எனவே தங்கத்தின் விலை குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.


அடுத்த மாதமே இந்த சுரங்கம் செயல்பாட்டுக்கு வர இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு சுரங்கத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில் பங்கேற்க உள்ளார் என சொல்லப்படுகிறது.

முதல் கட்டமாக 600 கிலோகிராம் தங்கம் பிரித்தெடுக்க முடிவு எடுத்திருப்பதாக நிறுவன அதிகாரிகள் கூறுகின்றனர். பின்னர் படிப்படியாக அடுத்த 15 ஆண்டுகளில் இங்கே இருந்து ஆண்டுக்கு 1000 கிலோ ரீபைண்டு கோல்டு எடுக்க முடிவு செய்துள்ளதாக இந்த நிறுவனம் கூறுகிறது. இது நடந்து விட்டால் ஜொன்னகிரி மற்றும் ஆந்திராவின் பொருளாதாரமே மாறும். இந்த பகுதியே வளர்ச்சி பெறும், மேலும் பல நிறுவனங்கள் உள்நாட்டில் தங்க சுரங்கம் அமைக்க ஊக்குவிக்கும்.

## ஜம்மு காஷ்மீர்: மலைப்பாதையில் பேருந்து கவிழ்ந்து 15 பேர் பலி!

ஜம்மு, ஏப். 20–

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டம் ராம்நகர் பகுதியில் உள்ள ககோர் கிராமத்திற்கு அருகே பேருந்து ஒன்று மலைப்பாதையில் இருந்து உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர் மற்றும் 20 பேர் காயமடைந்தனர். கொண்டை ஊசி வளைவில் பேருந்து திரும்பும்போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.




விபத்தை அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த உள்ளூர் மக்கள் மீட்புப் பணியில் இறங்கி, இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்டனர். பின்னர் போலீசார் மற்றும் மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து சென்று காயமடைந்த 20 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் உயிரிழப்பு அதிகரிக்ககூடும் என அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் உடல்களும் அதே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து மத்திய மந்திரி ஜிதேந்திர சிங், உதம்பூர் துணை ஆட்சியர் மிங்கா ஷெர்பாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை கேட்டறிந்தார். இந்த கோர விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 20.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 07–ம் தேதி

## போரடிக்கும் போர்!




ஈரான் மீது அமெரிக்கா–இஸ்ரேல் இணைந்து, கடந்த பிப்ரவரி மாதம் 28ம் தேதி போரை துவங்கியது. போர் தீவிரமானதை தொடர்ந்து, உலக கச்சா எண்ணெய் போக்குவரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதனால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததுடன், உலகளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. 40 நாட்களாக தொடர்ந்த போரை கைவிட வேண்டும் என்று அமெரிக்காவிற்கும், ஈரானுக்கும் உலக நாடுகள் கோரிக்கை விடுத்தது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில், கச்சா எண்ணெய் வரத்து பாதித்ததால் மக்கள் பெட்ரோல், காஸ் சிலிண்டர் கிடைக்காமல் தட்டுப்பாட்டுக்கும் ஆளாகினர். எனவே, ஈரான் தனது ஹார்முஸ் நீரிணையை திறக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியது. இதற்கிடையில், இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே, 10 நாட்கள் போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளதாக டிரம்ப் அறிவித்திருந்தார். இந்த போர்நிறுத்த காலகட்டத்தில் ஹார்முஸ் நீரிணை வழியாக அனைத்து எண்ணெய் கப்பல்களும் அனுமதிக்கப்படும் என்று ஈரான் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

இது குறித்து எக்ஸ்தளத்தில் பதிவிட்டுள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "லெபனான் நாட்டில் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக, ஹார்முஸ் நீரிணை வழியாக அனைத்து வணிக கப்பல்களும் முழுமையாக செல்ல அனுமதிக்கப்படும்,'' என்று தெரிவித்திருந்தார். அமெரிக்க அதிபர் டிரம்பும், ஹார்முஸ் நீரிணை முழுமையாக திறக்கப்பட்டுள்ளது என்று சமூக ஊடகங்களில் உறுதிப்படுத்தினார்.

இந்த தகவலால் அனைத்து நாடுகளும் கொஞ்சம் நிம்மதி பெருமூச்சு விட்டது. போரின் தாக்கத்தால் சிரமத்தில் தவித்த மக்களுக்கு, இந்த ஒப்பந்தம் சற்று ஆறுதலாக அமையும் என்பது இதற்கான முதல்காரணம். அதே நேரத்தில், இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தால் இந்தியா போன்ற நாடுகளுக்கு தடைபட்ட கச்சா எண்ணெய் வரத்து சீராகும். கச்சா எண்ணெய் விலையும் 10 சதவீதம் வரை குறையும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக எழுந்தது.

இந்த நிலையில், "ஹார்முஸ் நீரிணை திறப்பு என்பதை வரவேற்றாலும், ஈரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடர்ந்து நடைபெறும் என்று டிரம்ப் அறிவித்தார். இதனால் மீண்டும் அதிர்ச்சியில் உறைந்த ஈரான், "அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடரும் வரையில், ஹார்முஸ் நீரிணையின் வழியாகச் செல்லும் வர்த்தக கப்பல்களின் போக்குவரத்து முடக்கப்படும்" என்று அறிவித்துள்ளது. இதன் எதிரொலியாக, ஐக்கிய அரபு அமீரக கடற்பகுதியில் இருந்து ஹார்முஸ் நீரிணையை நோக்கி வந்து கொண்டிருந்த இந்திய கப்பலான 'பாக்யலட்சுமி' அடையாளம் காணப்பட்டு வழிமறிக்கப்பட்டு, திருப்பி விடப்பட்டுள்ளது. இதேபோல், இந்திய கச்சா எண்ணெய் கப்பலான தேஷ்சுரஷாவும், ஈரானிய படைகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்த வகையில், இந்திய கப்பல்கள் உட்பட சுமார் 20 கப்பல்கள் ஓமன் நாட்டை நோக்கிச் செல்வதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதனால் போர் நடக்கும் நாடுகள் சம்மந்தப்பட்ட மக்கள் மட்டுமன்றி, அதன் எதிரொலியால் சிரமங்களை சந்திக்கும் மக்களும் கவலையில் ஆழ்ந்துள்ளனர். மொத்தத்தில் உத்திரவாதங்கள் அனைத்தும் நொடியில் கரைந்து சிதைந்து, போர்ச்சூழல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தொடர்புடைய நாடுகளுக்கு வேண்டுமானால் இது போராக இருக்கலாம். ஆனால், ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்படும் அனைத்து மக்களுக்கும் 'இது போரல்ல, என்பது எண்ண ஓட்டமாக உள்ளது. எந்த முடிவும் எடுக்கப்படாமல் தொடர்ந்து உலக மக்களை போரடிக்கும் போர்.

## உயரும் ஏ.சி., செல்போன், பிரிட்ஜ், டி.வி. விலை!



சென்னை, ஏப். 20–
மெமரி சிப், கச்சா எண்ணெயில் இருந்து பெறப்படும் பிளாஸ்டிக் முதலிய மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை தொடர்ந்து, ஏ.சி., செல்போன், பிரிட்ஜ், வாஷிங்மெஷின், டி.வி. ஆகியவற்றின் விலை கடந்த 4 மாதங்களில் 3 முறை அதிகரித்துள்ளது. இம்மாத இறுதியில் 4–வது முறையாக மீண்டும் அதிகரிக்க இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு, பல்வேறு நுகர்வு பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. குறைக்கப்பட்டது. இதையடுத்து, வீட்டு உபயோக பொருட்களுக்கான தேவை அதிகரித்தது.

இந்த நிலையில் மூலப்பொருள் விலை உயர்வு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, ஏ.சி.க்கான மின் சேமிப்பு விதிகளில் மாற்றம் ஆகியவற்றால் ஜனவரி இறுதி முதல் பிப்ரவரி வரையிலான காலக்கட்டத்தில் இவற்றின் விலை அதிகரித்தது.

மார்ச் இறுதி முதல் ஏப்ரல் முதல் வாரம் வரையிலான காலக்கட்டத்தில் சரக்கு போக்குவரத்து கட்டண உயர்வு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, கச்சா எண்ணெய் தொடர்புடைய மூலப்பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றின் எதிரொலியாக 2–வது சுற்று விலை உயர்வு நடைமுறைக்கு வந்தது. அந்த வகையில்தான் தற்போது 4–வது முறையாக விலை அதிகரிக்க இருக்கிறது.

## விஜய் - சங்கீதா விவாகரத்து வழக்கு ஒத்திவைப்பு!



செங்கல்பட்டு, ஏப். 20–
விஜய் மற்றும் அவரது மனைவி சங்கீதா இடையிலான விவாகரத்து மனு விசாரணைக்கு வந்த நிலையில், இருதரப்பு கோரிக்கைகளையும் பரிசீலித்த கோர்ட்டு விசாரணையை ஜூன் 15–ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளது. கடந்த பிப்ரவரி 24–ம் தேதி சங்கீதா செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார். அதில், 2021 முதல் தாங்கள் தனித்தனியாக வாழ்ந்து வருவதாகவும், நடிகர் விஜய் ஒரு நடிகையுடன் தொடர்பில் இருந்ததால் தான் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும், தனக்கு அழுத்தம் கொடுத்தால் சம்பந்தப்பட்ட நடிகையின் பெயரை வெளியிட நேரிடும் என்றும் அந்த மனுவில் அவர் எச்சரித்திருந்தார்.

இன்று (ஏப்ரல் 20) இந்த வழக்கு செங்கல்பட்டு குடும்ப நல கோர்ட்டு நீதிபதி சசிகலா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கினை விசாரித்த நீதிபதி, வரும் ஜூன் 15–ம் தேதி நடிகர் விஜய் மற்றும் சங்கீதா ஆகிய இருவரும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டு, விசாரணையைத் தள்ளிவைத்தார்.

இதனைத்தொடர்ந்து, ஜூன் 15–ம் தேதி அன்று நேரில் ஆஜராகாமல், காணொலிக் காட்சி (Video Call) வாயிலாக ஆஜராக அனுமதி கோரி விஜய் தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். இது குடும்பப் பிரச்சினை என்பதால், இது குறித்து ஊடகங்களில் விவாதிக்கவோ அல்லது செய்திகள் வெளியிடவோ தடை விதிக்க வேண்டும் என்றும் விஜய் தரப்பில் மற்றொரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இருவரும் பரஸ்பரம் பிரிந்துவிடுவது (Mutual Consent) எனச் சுமூக முடிவெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், ஜூன் 15–ம் தேதி இருவரின் நேரில் அல்லது காணொலி வாயிலான விளக்கத்திற்குப் பிறகே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பல மடங்கு உயர்வு!



சென்னை, ஏப். 20–
தேர்தலையொட்டி ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதனிடையே அன்றைய தினம் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை போன்ற பெருநகரங்களில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் வாக்களிக்க தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். அவர்களின் வசதிக்காக நாளை முதல் தமிழக போக்குவரத்து துறை சார்பில் 10 ஆயிரம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில் அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்ய முடியாதவர்கள் அடுத்தபடியாக தனியார் ஆம்னி பேருந்துகளை தேர்வு செய்வார்கள், இந்நிலையில் பயணிகளின் சூழ்நிலையை பயன்படுத்தி சில ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் அதிக கட்டணம் வசூலிக்கின்றனர். சென்னையில் இருந்து மதுரை, கோவை, சேலம், திருச்சி, நெல்லை மற்றும் நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்களுக்கு செல்லும் ஆம்னி பஸ் கட்டணம் வழக்கத்தைவிட 2 முதல் 3 மடங்கு வரை அதிகரித்துள்ளது. சாதாரண நாட்களில் ரூ.1,000 முதல் ரூ.1,500 வரை கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில் தற்போது பல மடங்கு அதிகரித்து உள்ளது. இதனால் நடுத்தர மக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர்.

ஏப். 21,22 ஆகிய இரண்டு நாட்களும் சென்னையில் இருந்து நெல்லைக்கு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனமில்லா பேருந்துகளில் அதிகபட்ச கட்டணம் ரூ.2,400 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ரூ.3 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தூத்துக்குடிக்கு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன பேருந்துகளில் அதிகபட்சமாக ரூ.2,700 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ.3,200 வரையும், மதுரைக்கு அதிகபட்சமாக ரூ.2,200 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ.2,400 முதல் 3,500 வரையும், திருச்சிக்கு அதிகபட்சமாக ரூ.1,500 நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் ரூ.2,000 முதல் 2,600 வரையும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் இதுபோல அதிக கட்டணம் வசூலிப்பதைக் கூட ஒரு வியாபார யுக்தியாக கடந்து செல்ல முடிகிறது. ஆனால் தேர்தல் என்பது ஜனநாயக கடமை அதை நிறைவேற்ற செல்வோரிடம் இவ்வாறு அதிக கட்டணம் வசூலிப்பதை என்ன என்று சொல்வது என ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

## விருதுநகர் பட்டாசு ஆலை வெடிவிபத்து: பரபரப்பு தகவல்!



விருதுநகர், ஏப். 20–
விருதுநகர் தாலுகா சங்கரலிங்காபுரம் அருகே உள்ள கோவிந்தநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர் முத்துமாணிக்கம் (வயது 52). இவர் கட்டனார்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆவார். இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை கட்டனார்பட்டி பகுதி யில் இயங்கி வந்தது. மாவட்ட வருவாய் அதிகாரியின் உரிமம் பெற்ற இந்த பட்டாசு ஆலையில் 5 அறைகளில் பட்டாசு உற்பத்தி நடந்து வந்ததாக தெரிகிறது.

நேற்று காலையில் அந்த ஆலைக்கு ஆண்களும், பெண்களுமாக 50–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைக்கு வந்திருந்தனர். வழக்கம்போல் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு இருந்தனர். மதிய உணவு இடைவேளைக்கு பின்னர் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் மும்முரமாக இருந்த நிலையில் பட்டாசு தயாரிக்கும் ஒரு அறையில் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து அந்த அறையில் இருந்த பட்டாசுகள் வெடித்து சிதறின. உடனே அடுத்தடுத்து இருந்த அறைகளுக் கும் தீ பரவி, அந்த அறைகளில் இருந்த பட்டாசுகளும் வெடித்து சிதற தொடங்கின. இதில் இடிபாடுகளுக்கு இடையே உடல்கள் சிதறிய நிலையிலும், கருகிப்போய் கிடந்த நிலையிலும் இருந்தது அங்கிருந்த அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

அவர்களது உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்து போய் இருந்தன. மொத்தம் 25 பேர் பலியாகியுள்ளனர். 16 பேர் விருதுநகர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து மீது 6 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

4 தனிப்படை அமைத்து பட்டாசு ஆலை உரிமையாளரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். கட்டனார்பட்டி வனஜா பட்டாசு ஆலை உரிமையாளர் ஈஸ்வரி, கணவர் முத்துமாணிக்கம் தலைமறைவு; தலைமறைவான பட்டாசு ஆலை உரிமையாளருடன் தொடர்பில் இருந்தவர்களை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அதிக வெடி பொருட்களை மருந்து கலக்கும் அறையில் கவனக்குறைவாக கலந்ததால் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளதாகவும் விதிகளை மீறி ஒரே நேரத்தில் அதிக வெடிகளை தயாரிக்க முயன்றதாலும் பாதுகாப்பு உபகரணங்கள் முறையாக தடுக்காமல் அதிக வெடிகளை தயாரிக்க முயற்சித்ததால் விபத்து ஏற்பட்டுள்ளதாக போலீசாரின் முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடிவிபத்தில் உயிரிழந்தோருக்கு நிவாரண நிதி வழங்குவதில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்காம் உள்ளது. இதனால் நிவாரண நிதி வழங்கப்படும் வரை உடல்களை வாங்கப் போவதில்லை என உயிரிழந்தோரின் குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலும் விருதுநகர் அருகே பட்டாசு விபத்தில் 25 பேர் உயிரிழந்த வழக்கை மதுரை ஐகோர்ட்டு தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது. "உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஏன் இழப்பீடு இன்னும் வழங்கப்படவில்லை?'' என நீதிபதிகள் கேள்வி எழுப்பி உள்ளனர். இதுதொடர்பாக உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க அரசுத் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளனர்.

## கர்நாடகத்தில் மதுபானங்களின் விலை மீண்டும் உயர்வு?



பெங்களூரு, ஏப். 20–
கர்நாடகத்தில் காங்கிரஸ் அரசு அமைந்த பின்பு மதுபானங்களின் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. 5 உத்தரவாத திட்டங்களுக்கு நிதி தேவைப்படுவதால் மதுபானங்களின் விலையை அரசு உயர்த்தியது. இதற்கு மதுப்பிரியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், 2026–27–ம் ஆண்டு பட்ஜெட்டை தாக்கல் செய்த முதல்–மந்திரி சித்தராமையா, நாட்டிலேயே முதல் முறையாக கர்நாடகத்தில் ஆல்கஹாலின் அளவை பொறுத்து (ஆல்கஹால் இன் பேவரேஜ்) மதுபானங்கள் மீது வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். பட்ஜெட்டில் அறிவித்தபடி ஆல்கஹாலின் அளவுக்கு ஏற்றார் போன்று வரி விதிக்கும் முறையை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணையும் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இதனால் மதுபானங்களின் விலை 20 சதவீதம் வரை அதிகரிக்ககூடும் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. குறிப்பாக குறைவான விலை கொண்ட மதுபானங்களின் விலை உயர்த்தப்பட இருப்பதாக தெரிகிறது. 180 மில்லி அளவுள்ள மதுபானங்களின் விலை ரூ.80–ல் இருந்து ரூ.95–க்கு விற்கப்பட உள்ளது. இதுதவிர ரூ.5 முதல் ரூ.10 வரை பிற மதுபானங்களின் விலை உயரலாம் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. நாட்டிலேயே மதுபானங்களில் உள்ள 'ஆல்கஹால்' அளவை பொறுத்து வரி விதிக்கப்படுவது கர்நாடகத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.



## கஜகேசரி ராஜ யோகம்... இந்த ராசிக்காரர்களுக்கு பொற்காலாம்..!



ஜோதிட சாஸ்திரத்தில், கிரகங்களின் சேர்க்கை அல்லது பெயர்ச்சியின் காரணமாக 'ராஜ யோகங்கள்' உருவாகின்றன. அந்த வகையில், மிக விரைவில், அதாவது ஏப்ரல் 21–ஆம் தேதி, 'கஜகேசரி ராஜ யோகம்' ஒன்று உருவாகவுள்ளது. இதன் காரணமாக, குறிப்பிட்ட நான்கு ராசிக்காரர்களுக்கு அனைத்தும் பொன்னாக விளங்கும். அப்படியென்றால், அந்த ராசிகள் எவை?


கஜகேசரி ராஜ யோகம் என்பது மிகவும் சக்திவாய்ந்த ராஜ யோகங்களில் ஒன்றாகும். குரு மற்றும் சந்திரன் ஆகிய கிரகங்களின் சேர்க்கையால் இந்த யோகம் உருவாகிறது. வரும் ஏப்ரல் 21–ஆம் தேதியன்று, சந்திரன் மிதுன ராசிக்குள் பெயர்ச்சி அடைகிறார். ஏற்கனவே குரு கிரகம் அந்த ராசியில் சஞ்சரித்து வருகிறார். இதன் மூலம், இந்த இரண்டு கிரகங்களின் சேர்க்கை இணைந்து 'கஜகேசரி ராஜ யோகத்தை' உருவாக்கும். இப்போது, இந்த யோகம் எந்தெந்த ராசிகளுக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்பதைப் பார்ப்போம்.

**மிதுனம்:** கஜகேசரி ராஜ யோகத்தின் காரணமாக மிதுன ராசிக்காரர்களுக்கு மிகுந்த அதிர்ஷ்டம் உண்டாகும். சந்திரனின் தாக்கத்தினால், இக்காலகட்டத்தில் நீங்கள் மிகுந்த மன அமைதியுடன் திகழ்வீர்கள். அதுமட்டுமின்றி, உங்களுக்கு அனைத்தும் நன்மையாகவே அமையும். இந்த முழு காலத்தையும் நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கழிப்பீர்கள்.

**சிம்மம்:** சிம்ம ராசிக்காரர்களின் பொருளாதார நிலை மேம்படும். வருமானம் அதிகரிக்கும். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். முதலீடு செய்வதற்கு இது மிகவும் உகந்த நேரமாகும். கடன் தொடர்பான பிரச்சனைகள் முற்றிலுமாக நீங்கும். பொருளாதார ரீதியாக அவர்கள் மிகவும் வலுவான நிலையில் இருப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும்.

**கும்பம்:** கும்ப ராசிக்காரர்களுக்கு இக்காலம் மிகவும் அற்புதமாக அமையும். அவர்கள் மன அமைதியை உணர்வார்கள். இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்குப் புதிய வீடு அல்லது வாகனம் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். நீண்ட காலமாக அவர்கள் கொண்டிருந்த கனவுகள் அனைத்தும் நனவாகும். அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்; குறிப்பாகத் தங்கள் குடும்பத்தினருடன் இணைந்து இன்பமாக வாழ்வார்கள்.

**கன்னி:** கன்னி ராசிக்காரர்களுக்குப் பொருளாதாரம் மற்றும் ஆரோக்கியம் ஆகிய இரு துறைகளிலும் சிறப்பான நிலை அமையும். எதிர்பாராத வகையில் திடீர் பண வரவுகள் உண்டாகும். பணியிடத்தில் இருந்த தடைகள் அனைத்தும் நீங்கும். தொழில் மற்றும் வியாபாரம் செய்வோர் அதிக லாபம் ஈட்டுவார்கள். சமூகத்தில் உங்களுக்குச் சிறப்பான மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். உங்கள் அந்தஸ்து உயரும். தொழில், ஆரோக்கியம் மற்றும் பிற அனைத்து விஷயங்களிலும் நீங்கள் மிகச் சிறந்த நிலையில் இருப்பீர்கள்.



## சினிமா துளிகள்..!

## வா... வா... என் தேவதையே... குட் நியூஸ் சொன்ன அட்லீ!




அட்லீ– பிரியா தம்பதிக்கு இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு ப்ரியாவை திருமணம் செய்துகொண்டார் அட்லீ. இந்த தம்பதிக்கு முன்னரே மீர் என்ற ஆண்குழந்தை உள்ளது. தற்போது இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளது. இவர்களுக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## நான் சூனியக்காரியா.. கங்கனா ரணாவத்!




"எனது 26–வயதில் நான் காதலில் இருந்தேன். அப்போது எனது காதலர் என்னை பற்றி தவறான செய்திகளை பரப்பினார். நான் ரத்தம் குடிப்பேன் என்றும், பிளாக் மேஜிக் (சூனியம்) செய்வேன் என்றும் விமர்சித்தார். என்னை சூனியக்காரி என்று சொல்லியும் காயப்படுத்தினார். அந்த கடினமான நேரத்தில் நான் சினிமாவில் மட்டுமே கவனம் செலுத்தி, 'குயின்' படத்தின் மூலம் 'ஹிட்' கொடுத்தேன். அதெல்லாம் வாழ்வின் கடினமான காலகட்டம். தற்போது அந்த பிரச்சினை இல்லை'' என்று கங்கனா ரணாவத் குறிப்பிட்டார். கங்கனா ரணாவத் தற்போது மத்திய அமைச்சர் சிராக் பஸ்வானுடன் காதலில் இருப்பதாகன் 'கிசுகிசு'க்கப்பட்டு வருகிறார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### உஷார்.. சிக்கனின் இந்த பாகங்களை சாப்பிட்டால் பல உடல் நலப்பிரச்சனைகள் வரலாம்..!




அசைவ உணவுகளில் சிக்கன் பலருக்கு பிடித்த ஒன்று. கிரில்டு சிக்கன் அதன் மேல் தோலை அகற்றாமலேயே சமைக்கப்படுகிறது. பலர் வீட்டிலேயே தோலுடன் கூடிய கோழித் துண்டுகளையும் சமைக்கிறார்கள். இப்படி கோழித் தோலைச் சாப்பிடுவது உடல் நலத்திற்கு நல்லதா? அல்லது ஆபத்தானதா? என்று பலருக்கு சந்தேகங்கள் உள்ளன. நிபுணர்களின் கூற்றுப்படி, கோழித் தோலைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

ஏனெனில் அதில் கொழுப்புச்சத்து மிக அதிகமாக உள்ளது. அது நிறைவுற்ற கொழுப்பு. நீங்கள் கோழித் தோலை அதிகமாகச் சாப்பிட்டால், இந்தக் கொழுப்பு உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சாப்பிடுவது பெரிய பிரச்சனையாக இருக்காது. ஆனால், அதை அடிக்கடி சாப்பிடும் பழக்கம் உங்களுக்கு இருந்தால், உடனடியாக நிறுத்துவது நல்லது.

என்னென்ன பிரச்சனைகள் வரும்:

கோழித் தோலைச் சாப்பிடுவது முக்கியமாக இதய நோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது. அதில் உள்ள அதிகப்படியான கொழுப்பு இரத்தத்தில் கலந்து, கெட்ட கொழுப்பின் அளவை அதிகரிக்கிறது. இதனால் இரத்த நாளங்களில் கொழுப்பு தேங்குகிறது. இது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். மேலும் இது இரத்த அழுத்தத்தையும் அதிகரிக்கிறது. ஏற்கனவே இதயப் பிரச்சனைகள் உள்ளவர்கள் அல்லது அதிக கொழுப்பால் அவதிப்படுபவர்கள் கோழித் தோலைச் சாப்பிடக்கூடாது.

**எடை அதிகரிப்பு:**

கோழித் தோலில் அதிக கலோரிகள் உள்ளன. இது விரைவான உடல் எடை அதிகரிப்புக்கு வழிவகுக்கும். துரித உணவகங்களில் காணப்படும் பொரித்த கோழியில், தோல் அதிக எண்ணெயை உறிஞ்சுகிறது. அதைச் சாப்பிடுவது உடலில் உள்ள கலோரிகளை இரட்டிப்பாக்குகிறது. இது உடல் பருமனை ஏற்படுத்துகிறது. அதிகப்படியான எடை, நீரிழிவு, தைராய்டு மற்றும் மூட்டு வலி போன்ற பிரச்சனைகளையும் ஏற்படுத்தக்கூடும். எனவே, முடிந்தவரை கோழித் தோல் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

கோழித் தோல் முற்றிலும் தடைசெய்யப்பட்ட ஒரு பொருள் என்று சொல்லிவிட முடியாது. எப்போதாவது வறுக்கப்பட்ட அல்லது வேகவைக்கப்பட்ட கோழித் தோலைச் சாப்பிடுவதில் தவறில்லை. ஒவ்வொரு வாரமும் அதைச் சாப்பிடும் பழக்கம் உங்களுக்கு இருந்தால், அதைத் தவிர்த்துவிடுங்கள். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சாப்பிடுவது பெரிய பிரச்சனையை ஏற்படுத்தாது. இருப்பினும், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஏற்கனவே உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் கோழித் தோலைச் சாப்பிடுவது நல்லதல்ல.

## கடும் நிதி நெருக்கடி: ஊதியம் கொடுக்க முடியாமல் இமாச்சலபிரதேச அரசு திணறல்!




காங்கிரஸ் ஆட்சி நடை பெற்று வரும் இமாச்சலபிரதேசத்தில் மாநில அரசின் செலவுகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளது. அரசின் வருவாயில் பெரும் பகுதி அரசு ஊழியர்கள் ஊதியம், ஓய்வூதியம், பழைய கடன்களுக்கான வட்டி ஆகியவற்றுக்கே செலுத்தப்படுகிறது.

இது தவிர இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் எதிர்பாராத செலவுகள், வருவாய் ஆதாரம் குறைவது பழைய ஓய்வூதியத்தை அமல்படுத்தியதால் ஏற்படும் சுமை ஆகியவை மாநிலத்தை கடும் நிதி நெருக்கடியில் தள்ளி விட்டது. கடந்த மாதம் பட்ஜெட் தாக்கல் செய்தபோது, முதல்–மந்திரி சுக்வீந்தர் சிங்குக்கு முதல்–மந்திரி ஊதியத்தில் 50 சதவீதம், அமைச்சர்கள் ஊதியத்தில் 30 சதவீதம், எம். எல்.ஏ.க்கள் ஊதியத்தில் 20 சதவீதம் அடுத்த 6 மாதங்களுக்கு பிறகு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதிலும் பிரச்சனை எழுந்துள்ளது.

இது தொடர்பாக மாநில நிதித்துறை வெளியிட்ட அறிக்கையில், "தலைமைச் செயலாளர், கூடுதல் செயலாளர்கள், முதன்மை செயலாளர்கள், காவல்துறை டி.ஜி.பி., ஏ.டி.ஜி.பி. வனத்துறை தலைமை அதிகாரி, இணைய அதிகாரிகள் உள்ளிட்டோரின் சம்பளத்தில் 30 சதவீதம் அடுத்த 6 மாதங்களுக்கு பின் வழங்கப்படும்.

இதேபோல அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், காவல் துறை ஐ.ஜி., எஸ்.பி., வனத்துறையில் 2–ம் நிலை அதிகாரிகள் ஆகியோருக்கு 20 சதவீத ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டு அடுத்த 6 மாதங்கள் கழித்து வழங்கப்படும். இது தற்காலிக நட வடிக்கைதான். மாநிலத்தின் நிதிநிலையை சீராக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநிலத்தின் நிதி நிலை சீரடைந்ததும் நிலுவை ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் சமையல் எரிவாயு பயன்பாடு 13% வீழ்ச்சி!



புதுடெல்லி, ஏப். 20–

இந்தியாவில் சமையல் எரிவாயு பயன்பாடு சென்ற ஆண்டைவிட இந்தாண்டு மார்ச் மாதம் 13% குறைந்துள்ளது. மேற்காசிய போர் காரணமாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவில் சமையல் எரிவாயு பயன்பாடு சென்ற ஆண்டைவிட இந்தாண்டு மார்ச் மாதம் 13% குறைந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் மார்ச் மாதத்திற்கான எரிவாயு பயன்பாடு 2.379 மில்லியன் டன்களாக கணக்கிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் 2.729 மில்லியன் டன்களாக இருந்தது.

சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து இந்தியா அதிகளவு எரிவாயு இறக்குமதியை நம்பியுள்ள நிலையில் போர் காரணமாக ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால் எரிவாயு பயன்பாடு குறைந்துள்ளது. மத்திய அரசு எரிவாயு பற்றாக்குறையை சமாளிக்கும் விதமாக வீடுகளுக்கான எரிவாயு உபயோகத்திற்கு முன்னுரிமை கொடுத்து வணிகப் பயன்பாட்டிற்கான வி நி யோ க த் தை க் குறைத்தது.

தரவுகளின்படி, வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு விற்பனை 8.1% குறைந்து 2.219 மில்லியன் டன்களாக உள்ளது.

எரிவாயு பற்றாக்குறையின் தாக்கம் வீட்டு உபயோகம் அல்லாத பிரிவுகளில் மிகக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா தனது எரிவாயு தேவையில் சுமார் 60% இறக்குமதி மூலம் பெறுகின்றது. இதனால், எரிவாயு பற்றாக்குறை காரணமாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், பெட்ரோலிய வேதிப்பொருள்கள் உற்பத்தியில் எரிவாயு உற்பத்தியை அதிகப்படுத்துமாறும் அரசு அறிவுறுத்தியிருந்தது.

இதன் காரணமாக, கடந்தாண்டு மார்ச் மாதத்தில் 1.1 மில்லியன் டன்களாக இருந்த எரிவாயு உற்பத்தி, இந்தாண்டு மார்ச் மாதம் 1.4 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.

மார்ச் மாதத்தில் சரிவு ஏற்பட்ட நிலையிலும், 2025–26 நிதியாண்டிற்கான ஒட்டுமொத்த எரிவாயு பயன்பாடு 6% அதிகரித்து 33.212 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.

## சவாலான பந்தயத்தில் சம்பவம் செய்த அஜித்குமார்!



பெல்ஜியம், ஏப். 20–

பெல்ஜியம் நாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இரண்டாவது இடத்தை பெற்ற நிலையில், இந்திய தேசிய கொடியை ஏந்திய படி அஜித் குமார் வெற்றிக் கோப்பையை உயர்த்தி காண்பித்தார். இது தொடர்பாக அஜித் குமார் ரேசிங் அணியின் எக்ஸ் தளப் பக்கத்தில், "கோடிக்கணக்கானவர்களின் கனவுகளை சுமந்து சென்ற பந்தயத்தில் வெற்றி பெற்றுள்ளோம். புகழ்பெற்ற Spa–Francorchamps பந்தய களத்தில் 24 மணி நேர தொடர் GT 3 ப்ரோ பந்தயத்தில் அஜித் குமார் ரேசிங் அணி 2–ஆம் இடம்பிடித்துள்ளது. இந்த வெற்றி ஆர்வம், மன உறுதி மற்றும் விடாமுயற்சிக்கு எல்லை இல்லை என்பதை நிரூபித்து ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பெருமை சேர்த்துள்ளது," என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெள்ளி வாங்கும்போது உஷார்.. 5 ஆண்டுகளில் 31 சதவீதம் பேர் ஏமாற்றம்!




சென்னை, ஏப். 20–

தங்கத்தை போல் வெள்ளியையும் அடகுவைத்து பணம் பெறலாம் என்று மத்திய அரசு அறிவித்த பிறகு, வெள்ளியின் விலையும் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. விலை அதிகரித்தாலும் வெள்ளி விற்பனையும் கூடியுள்ளது.

இதை சாதகமாக பயன்படுத்தி, வெள்ளி விற்பனையில் மோசடியும் அதிகரித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 31 சதவீதம் பேர் இவ்வாறு ஏமாற்றப்பட்டதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய அரசு கடந்த ஆண்டு (2025) செப்டம்பர் 1–ந் தேதி முதல் வெள்ளி நகைகளுக்கு தன்னார்வ ஹால்மார்க் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. வெள்ளி வாங்குபவர்களும் பி.ஐ.எஸ். கேர் செயலி வாயிலாக பொருளின் தூய்மை, ஹால்மார்க் செய்யப்பட்ட தேதி, சோதனை மையம் உள்ளிட்ட விபரங்க ளையும் சரிபார்த்துக்கொள்ள லாம். ஆனாலும், கடந்த 5 ஆண்டுகளில் வெள்ளி வாங்கியவர்களில் 31 சதவீதம் பேர் ஏமாற்றப்பட்டுள்ளதாக, லோக்கல் சர்க்கிள்ஸ் நிறுவன ஆய்வு அறிக்கை கூறுகிறது. இந்த ஆய்வில் வெள்ளி வாங்கிய 19,148 பேரில், 23 சதவீதம் பேர், நகை கடைகள் அல்லது இணையதளங்கள் வாயிலாக ஒன்றுக்கு மேற்பட்ட முறை ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்து உள்ளனர்.

கிட்டத்தட்ட 8 சதவீதம் பேர் ஒருமுறை மோசடியில் சிக்கியதாக கூறியுள்ளனர். இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 93 சதவீதம் பேர், வெள்ளி பொருட்களுக்கு ஹால் மார்க் செய்யும் முறையை கட்டாயமாக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

## அகிலேஷ் யாதவ் டீ குடித்த கடைக்கு அதிகாரிகள் மிரட்டல் - கடையை மூடும் உரிமையாளர்!



உத்தர பிரதேசம், ஏப். 20–

உத்தர பிரதேசத்தின் பிரதான எதிர்க்கட்சி சமாஜ்வாதி. இதன் தலைவர் அகிலேஷ் யாதவ். இவர் மக்களவை எம்.பி.யாக உள்ளார். ஆளும் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக அரசை தொடர்ந்து விமர்சித்து வருகிறார்.

இந்த சூழலில் அண்மையில் உத்தர பிரதேச மாநிலத்தின் பேட்பூர் மாவட்டத்தில் உள்ள டீக்கடை ஒன்றிற்கு அகிலேஷ் யாதவ் சென்றுள்ளார்.


அங்கு ஒரு டீ கடையில் டீ குடித்த அவர் டீக்கடை உரிமையாளரான இளைஞர் ஆரியன் உடன் சகஜமாக பேசிவிட்டு பின்னர் ஒன்றாக புகைபடம் எடுத்துக்கொண்டார். இந்த புகைப்படம் இணையத்தில் வைரலானது.

இந்த நிலையில் அகிலேஷ் யாதவ் சென்ற டீக்கடைக்கு சென்ற அதிகாரிகள், அலுமினிய பாத்திரத்தில் டீ தயாரிப்பதாக கூறி கடைக்கு சீல் வைக்க போவதாக அதிகாரிகள் எச்சரித்தாக தெரிகிறது.

அரசியல் உள்நோக்கத்துடன் தன் கடை குறிவைக்கப்படுவதாகவும், தனது வா ழ் வா தா ர ம் பறிக்கப்படுவதாகவும் வேதனை தெரிவித்த டீக்கடை உரிமையாளர் ஆரியன் தனது கடையை மூடுவதாக அறிவித்துள்ளார்.

பாஜக ஆட்சியில் அதிகாரிகளின் அடாவடித்தனத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

## வார தொடக்கத்தில் குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஏப். 20–

தங்கம் உயரும் என்று எதிர்க்கப்பட்ட நிலையில், சற்று குறைந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 60 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14,300–க்கும் சவரனுக்கு 480 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி 280 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



பழனி அடிவாரம் சங்கராலயத்தில் சின் மயானந்த சுவாமி சிலை. சிலைக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் முருகனடிமை பாலசுப்ரமணிசாமிகள், பா.சிவகுமார், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, விஷ்வ ஹிந்து பரிசத் அம்பி ராமகிருஷ்ணன், செந்தில் ஜி, யோகா சிவகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

## மிஸ் இந்தியா பட்டம் வென்ற சாத்வி!



புவனேஸ்வர், ஏப். 20–

ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் நகரில் 75–வது மிஸ் இந்தியா–2026 போட்டி பிரமாண்டமாக நேற்று நடைபெற்றது.

இறுதி போட்டில் 30 போட்டியாளர்கள் கலந்து கொண்ட நிலையில், அவர்களை பின்னுக்கு தள்ளி கோவாவை சேர்ந்த சாத்வி சதீஷ் சைல் (நடுவில் இருப்பவர்) மிஸ் இந்தியா–2026 பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்த உள்ளார்.

இந்த போட்டியில் மராட்டிய மாநிலத்தை சேர்ந்த ராஜ்நந்தினி பவார் (வலதுபுறம் இருப்பவர்) 2–வது இடத்தையும், ஜம்மு–காஷ்மீரை சேர்ந்த ஸ்ரீ அத்வைதா (இடதுபுறம் இருப்பவர்) 3–வது இடத்தையும் பெற்றனர். வெற்றிக்கு பின்னர் சாத்வி சதீஷ் சைல் கூறுகையில், "இது கனவு போல உள்ளது. உலக மேடையில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது பெருமை" என்று தெரிவித்தார்.

## வேலை வாய்ப்பு

### எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் - வேலைவாய்ப்புகள்




நிறுவனத்தின் பெயர்: எல்.ஐ.சி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 180 இளநிலை உதவியாளர் பணியிடங்கள்

பணிபுரியும் இடம்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 16.04.2026

கடைசி தேதி: 30.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.lichousing.com/

## விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு....!



விருதுநகர்,ஏப். 20–

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டி அருகே உள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. வெடி விபத்தின் தாக்கத்தால் சிலரது உடல் உயரே பறந்து வந்து விழுந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ள நிலையில், பலரது உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்து போனதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது இதுபோன்ற விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்போது என கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

## பழனி முருகன் கோவில் சித்திரை மாத கார்த்திகை! பக்தர்கள் குவிந்தனர்!!

பழனி, ஏப். 20–

பழனி முருகன் மலைக்கோவிலில் நேற்று சித்திரை மாத கார்த்திகை




நாளையொட்டி, அதிகாலை நாலு மணிக்கே நடை திறக்கப்பட்டது. விஸ்வரூப தரிசனம் நடைபெற்றது. முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது. நேற்று மாலை நாலு முப்பது மணிக்கு முருகப்பெருமான் தங்கமயில் வாகனத்தில் திருஉலா வரும் காட்சி நடைபெற்றது. இரவு 7 மணிக்கு தங்க ரதம் தேரோட்டம் நடைபெற்றது. பின்பு கார்த்திகை மண்டபத்தில் பக்தர்கள் பங்கேற்ற 1008 திருவிளக்கு பூஜைகள் நடைபெற்றது. சித்திரை மாத கார்த்திகையையொட்டி பக்தர்கள் மூன்று மணி நேரம் காத்திருந்து முருகப்பெருமானை சாமி தரிசனம் செய்தனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## நாட்டின் அனைத்து கலாசாரங்களும் சம நிலையில் இருக்க வேண்டும்- ராகுல் காந்தி பேச்சு!

கன்னியாகுமரி, ஏப். 20–
கன்னியாகுமரியில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி உரையாற்றினார்.



அப்போது அவர் கூறியதாவது:
மணிப்பூரின் அமைதி சீர்குலைய பாஜகவே காரணம். தனிப்பட்ட மொழி, வரலாறு, பண்பாடு, கலாசாரம் சிதைக்கப்படக்கூடாது. அந்தந்த மாநிலங்கள்தான் அந்தந்த மாநிலங்களை ஆட்சி செய்ய வேண்டும். நாட்டின் அனைத்து கலாசாரங்களும் சம நிலையில் இருக்க வேண்டும். அதிமுக இப்போது வெற்று கூடாரமாகியுள்ளது. பிளவுவாத அரசியலை வளர்க்கும் பாஜக, ஆர்.எஸ்.எஸை எதிர்த்து போராடுவதே நம் அரசியல் களம்.

அனைத்து மொழிகளுக்கும் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. ஒவ்வொரு மொழியும் பொக்கிஷம். தமிழ்நாட்டில் பாஜக நுழைவதற்கான கருவியாக அதிமுக உள்ளது. தமிழ் மொழியை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளோம். ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தத்தை எதிர்ப்பவர்கள் தமிழர்கள். தேர்தல் கட்டமைப்பை சீர்குலைப்பதே பாஜகவின் நோக்கம். தென் மாநில தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க சதி நடைபெறுகிறது. பிரதமர் மோடியை டிரம்ப் கட்டுப்படுத்தியதுபோல, மோடியும் அதிமுகவை கட்டுப்படுத்த எண்ணம் கொண்டுள்ளார்

தமிழகத்தில் மகளிர் உரிமை திட்டம் எனும் சிறப்பான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எங்கள் கூட்டணி இதனை தொடர்ந்து செய்யும். 2 ஆயிரமாக உயர்த்த உறுதி அளித்துள்ளோம்'' இவ்வாறு அவர் கூறினார்.

## அரசியல் தலைவர்கள் பிரசாரம் செய்யும் இடங்கள்!

சென்னை, ஏப். 20–
தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான பிரசாரம் நாளையுடன் ஓய உள்ளது. இதனால், இறுதி கட்ட பிரசாரத்தில் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். முதல்வர் முக ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் பிரசாரம் செய்யும் இடங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு; .

ராகுல் காந்தி: கன்னியாகுமரி, நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி: எடப்பாடி.

த.வெ.க. தலைவர் விஜய்: சென்னை

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி: நீடாமங்கலம், ஒரத்தநாடு.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ: கடையநல்லூர்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு மாநில செயலாளர் சண்முகம்: மதுராந்தகம், செய்யூர்.

இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் வீரபாண்டியன்: சென்னை.

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன்: திருப்பரங்குன்றம், திருமங்கலம், சாத்தூர், ராஜபாளையம், வாசுதேவநல்லூர்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ்: மேட்டூர் (மேச்சேரி), எடப்பாடி (ஜலகண்டபுரம்), சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சங்ககிரி (தாரமங்கலம்).

பா.ஜனதா முன்னாள் தலைவர் அண்ணாமலை: சென்னை.

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன்: திருவெறும்பூர், லால்குடி, ஸ்ரீரங்கம், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு.

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன்: குன்னம், அரியலூர், ஒரத்தநாடு.

பா.ஜனதா தேசிய பொதுக்குழு உறுப்பினர் சரத்குமார்: வாசுதேவநல்லூர், ராஜபாளையம்

## அந்த பெட்டி என்னை ஒருமுறை ஏமாற்றியிருக்கிறது; ஆனால்... கமல்ஹாசன் பரபரப்பு பேச்சு!

திருப்பூர், ஏப். 20–
சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹா சன் எம்.பி. தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில் திருப்பூர் மாவட்டம் அவினாசி தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டாக்டர் கோகிலாமணியை ஆதரித்து அவினாசி புதிய பஸ் நிலையத்தில் கமல்ஹாசன் எம்.பி. பிரசாரம் செய்தார்.



அப்போது அவர் பேசியதாவது:– திராவிடம் நாடு தழுவியது என்பதை தைரியமாக சொல்பவன் நான். மகளிர் உரிமைத்தொகையை எங்கிருந்து கொடுக்கிறார் என்கிறார்கள். உங்கள் சொத்து உங்களிடமே வர வேண்டும். வடக்கில் இருந்து நம்மை தேய்த்துக்கொண்டும். இடித்துக் கொண்டும் இருந்தவர்கள் இல்லாமல் இருந்திருந்தால் இன்னும் அதிகம் பேர் நின்றிருப்பார்கள். தமிழ் இனத்தின் துரோகிகளை விரட்டி அடிப்போம்.

வந்தாரை வாழ வைப்போம். இங்கு வாகை சூடலாம் என நினைத்தால் விரட்டியடிப்போம். இந்த உறுதியை நான் எடுக்கும் உறுதியாக இல்லாமல் நாம் எடுக்கும் உறுதியாக எடுக்க வேண்டும். தமிழ் வீரம் தரணி ஆளும். வருகிற 23–ந் தேதி நீங்கள் நல்ல தீர்ப்பை அளிக்க வேண்டும். வடக்கில் இருந்து வரும் துரோகத்தை தடுத்தே ஆக வேண்டும்.

உங்கள் சின்னம் உதய சூரியன். அந்த சின்னத்துக்கு வாக்களியுங்கள். அந்த பெட்டி என்னை ஒரு முறை ஏமாற்றியிருக்கிறது. மறுபடியும் ஏமாறக்கூடாது. மக்கள் என்னை ஏமாற்றவில்லை. சதி தான் ஏமாற்றியது. விழிப்பாய் இருங்கள். தமிழ்நாடு தான் என்னுடைய அணி. நாங்கள் விளையாட வரவில்லை. மறுபடியும் ஜெயிக்க வையுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி திருவாடானை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கீர்த்திகா முனியசாமி திருவாடானை தொகுதிக்குட்பட்ட வ.உ.சி நகர், சிவஞானபுரம், மகாசக்தி நகர், சக்கரக்கோட்டை, சேதுநகர், பசும்பொன் நகர், கூரியூர், அச்சுந்தவையில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடு தோறும் சென்று பொதுமக்களிடம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இந்த பிரச்சாரத்தின் போது, ஜோதி நகர் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் சைனா பாஸ்கர் மற்றும் மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் சி.ஆர் குமார் ஆகியோரின் ஏற்பாட்டில் வேட்பாளர் கீர்த்திகா முனியசாமிக்கு ராட்சத ஆப்பிள் மாலை அணிவித்து, தாரை தப்பட்டை முழக்கத்துடன் பூமாலை பொழிந்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு அந்த பகுதியில் தேர்தல் களத்தை உற்சாகமாக மாற்றியதுடன், அதிமுகவிற்கு ஆதரவு அதிகரித்துள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.





திண்டுக்கல் சட்டமன்ற வேட்பாளர் ஐபி செந்தில் குமார் 6–வது வார்டு சுசிலா ஆஸ்பத்திரி, பழைய மேற்கு காவல் நிலையம், மதுரை வீரன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் மக்கள் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது வீடு வீடாக நடந்து சென்று ஓட்டு சேகரித்தார் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பல்லடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் க செல்வராஜ் எம்எல்ஏ அவர்கள் பல்லடம் நகரத்திற்கு உட்பட்ட டிஇஎல்சி சகாயர் ஆலயம் மற்றும் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் ஆகிய இரண்டு சர்ச்சில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது பேசிய அவர் சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் திமுக துணை நிற்கும் எனவும் மேலும் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத்தில் பேருந்து நிறுத்தம் இல்லை எனவும் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர் அதனை தான் வெற்றி பெற்ற பிறகு இங்கு பேருந்து நின்று செல்வதற்கு ஏற்பாடு செய்து வருவதாக தெரிவித்தார்உடன் பல்லடம் நகர செயலாளர் ராஜேந்திரகுமார் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் திமுக தலைமை என கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



பாஜக வேட்பாளர் சூறாவளி சுற்றுப்பயணம். புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி பாஜக வேட்பாளர் உதயகுமார் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தாமரை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார் தாவுது மில், ரங்கம்மா சத்திரம், வெள்ளனூர், வடசேரிபட்டி உள்ளிட்ட பகுதிகளில் வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார் வேட்பாளருக்கு சென்ற இடமெல்லாம் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் ரகுபதி பல்வேறு பகுதிகளுக்குச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் தப்பத்தான் பட்டியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட அமைச்சர் ரகுபதிக்கு பெண்கள் வரவேற்பாளித்தனர் அது மட்டுமின்றி தங்களது பகுதிகளுக்கு தேவையான கோரிக்கைகளையும் பொதுமக்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர் அப்போது உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து திமுக ஆட்சி மீண்டும் அமைந்த உடன் உங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார்.









மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பல்லடம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் க செல்வராஜ் எம்.எல்.ஏ அவர்கள் திருப்பூர். மத்திய மாவட்டம் பல்லடம் வடக்கு ஒன்றியம் சார்பில். என்.எஸ்.கே.நகரில்.குன்னாங்கல்பாளையம். சென்னிமலை பாளையம். அக்கணம்பாளையம்.பொன் நகர்.எஸ்.ஆர் நகர். அய்யம்பாளையம்.எம் ஜி ஆர் நகர்.அவரப்பாளையம்.மீனாம்பாறை. நொச்சி பாளையம் ஆகிய இடங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது அவருக்கு மாலை அணிவித்து ஆராத்தி எடுத்து மலர் தூவி பொதுமக்கள் உற்சாக வரவேற்பு தந்தனர் உடன் ஒன்றிய செயலாளர் சீனிவாசன். சோமசுந்தரம். மற்றும் திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகள் திமுக கழக உடன்பிறப்புகள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்...

### வாக்காளர் அட்டை இல்லையா?

## வாக்களிக்க 12 மாற்று ஆவணங்கள்: தேர்தல் ஆணையம் பட்டியல் வெளியீடு!




சென்னை, ஏப். 20–
தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் 23 ஆம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், வாக்காளர்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது.

அதன்படி, * ஆதார் அட்டை, * மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, * புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், * தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஓட்டுநர் உரிமம், * வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card), * தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை;

இந்திய கடவுச் சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், * மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், * நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் * இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

## மு.க.ஸ்டாலின் ஆட்சியில் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு வளர்ந்துள்ளது - அரவிந்த் கெஜ்ரிவால் பேட்டி!




சென்னை, ஏப். 20–
தேர்தல் பரப்புரைக்காக சென்னை வந்த ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால்

சென்னை விமான நிலையத்தில்செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:– மு.க.ஸ்டாலினை ஆதரித்து பரப்புரையில் ஈடுபட வந்துள்ளேன். தமிழ்நாடு மக்களுக்காக மிகச்சிறந்த பணிகளை மு.க.ஸ்டாலின் செய்து வருகிறார். அவரது இந்த ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டுள்ளது. மீண்டும் அவர் ஆட்சிக்கு வந்தால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மேலும் வளர்ச்சி அடையும். பாஜக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அனைத்தும் நாசமாகிவிடும். ஏனெனில் டெல்லியிலும் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு, நாங்கள் செய்த அனைத்து நல்ல திட்டங்களையும் அவர்கள் முழுமையாக அழித்துவிட்டார்கள்.

மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கை ஸ்டாலின் வலுவாக எதிர்ப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தொகுதி சீர்திருத்த மசோதா ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும். அது தோற்கடிக்கப்பட்டது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இது மத்தியில் உள்ள மோடி அரசுக்கு கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும். இப்போது பாஜ அரசின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன என்று நான் நினைக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 11 ஆயிரம் சமூக வலைத்தள பதிவுகள் மீது நடவடிக்கை!




புதுடெல்லி, ஏப். 20–
தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில சட்டசபை தேர்தல்களை யொட்டி, சட்டவிரோதமான, திசைதிருப்பக்கூடிய மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப த்தில் உருவாக்கப்பட்ட சமூக வலைத் தள பதிவுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தேர்தல் கமிஷன் ஏற்கனவே உத்தரவிட்டு இருந்தது.

அதன்படி, 5 மாநில தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மார்ச் 15–ந் தேதியில் இருந்து இதுவரை 11 ஆயிரம் சட்டவிரோத சமூக வலைத்தள பதிவுகள் மற்றும் இதர உள்டக்கங்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது. அந்த பதிவுகளை நீக்குதல், வழக்குப்பதிவு செய்தல், விளக்கம் கோருதல், மறுப்பு தெரிவித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கூறியுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020